IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.

O.S.No.383/2009

DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.55 PM.

வா.சா. 1 சாட்சி கொண்டப்பன் த.பெ.இராமசாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 02.09.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. தரைக்கு அடியில் தாவா பாதை வழியாக PVC பைப் செல்கிறது என்றால் சரிதான். அ.வ.எண்.499/2009 வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி அறிக்கையில் வாதி ஆறுமுகம் என்ற அம்மாசி வீட்டிலிருந்து கழிவு நீர் மேற்படி பைப்பின் வழியாக செல்கிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

2. இராவுத்தன், ஆறுமுகம் என்ற அம்மாசி மற்றும் முத்துவேல் ஆகியோர்கள் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். முருகன் என்பவர் எனது சித்தப்பாவினுடைய மகன் என்றால் சரிதான். ஆறுமுகம் மற்றும் இராமசாமி ஆகியோர்கள் உடன் பிறந்தவர்கள் என்றால் சரியல்ல. ஆறுமுகத்திற்கு கொண்டப்பன், சுப்புராம் என்ற மகன்கள் என்றால் சரிதான். கொண்டப்பனுக்கு ஆறுமுகம், முத்துவேல் மற்றும் இராவுத்தன் ஆகியோர்கள் மகன்கள் என்றால் சரிதான்.

3. சுப்புராமுக்கு இராவுத்தன், முருகன் என்பவர்கள் மகன்கள் என்றால் சரிதான். இராமசாமிக்கு வேலுச்சாமி, இராவுத்தன் என்பவர்கள் மகன்கள் என்றால் தெரியாது. சொக்கப்பசாமி கவுண்டருக்கு சேதுராமன், கொண்டப்பன் மகன்கள் என்றால் சரிதான். தொட்டப்பசாமி கவுண்டர் கந்தசாமி கவுண்டர், வெள்ளைச்சாமி கவுண்டர் உடன் பிறந்தவர்களா என்றால் சரியல்ல.

4. தொட்டப்பசாமி கவுண்டருக்கு சேதுராமன், கொண்டப்பன் மகன்கள் என்றால் சரிதான். சேதுராமனுக்கு முத்துராவுத்தன், வெள்ளைச்சாமி, பழனிக்குமார், இராமசாமி ஆகியோர்கள் மகன்கள் என்றால் சரிதான். கொண்டம்மாள், இந்துராணி என்ற மகள்களும் உள்ளார்கள். கந்தசாமி கவுண்டருக்கு சுப்புராமன், பழனிக்குமார் என்பவர்கள் மகன்கள் என்றால் சரிதான்.

5. 25.04.1979 ல் பழனிக்குமார் மனைவி காலம்மாள் அவர்களது மகள் சரோஜாதேவியிடமிருந்து நான் கிரையம் வாங்கிய ஆவணம்தான் வா.சா.ஆ. 2 என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ. 2 காலி மனையின் கிரைய ஆவணம் என்றால் சரிதான். ஆனால் மண் வீடாக கிரையம் வாங்கினேன். மேற்படி வா.சா.ஆ. 3 காலி மனையின் கிரைய ஆவணம் என்றால் சரிதான். ஆனால் மண் வீடாக கிரையம் வாங்கினேன். நான் அரசாங்கத்தை ஏமாற்றி மண் வீடாக இருந்ததை காலி இடமாக குறிப்பிட்டு வரி ஏய்ப்பு செய்ததால் என் மீது கு.மு.வி.ச.பிரிவு 340 ன் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ. 2, வா.சா.ஆ. 3 மூலம் கிரையம் பெற்ற பின்பு மேற்படி இடத்தில் காண்கிரிட் கட்டிடம் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி

நான் வீடு கட்டிட வரைபட அனுமதி பெற்றுள்ளேனா என்றால் நான் வீடு கட்டும்போது என்ன நடைமுறையோ அதன் படிதான் வீடு கட்டியுள்ளேன். வா.சா.ஆ. 2 , வா.சா.ஆ. 3 ஆவணங்களுக்கு மூல ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. நான் கிரையம் வாங்கும்போது இடத்தை அளந்துபார்த்துதான் வாங்கினேனா என்றால் அளந்து பார்த்துதான் வாங்கினேன். மேற்படி வா.சா.ஆ. 2 மற்றும் வா.சா.ஆ.3 ல் அளந்துபார்த்து வாங்கியதாக அடிப்படை ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அளந்து பார்த்து வாங்கி இருந்தால் உண்மை தெரிந்திருக்கும் என்றால் நான் அளந்து பார்த்துதான் வாங்கினேன். மேற்படி அளந்து பார்த்து வாங்கியதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. பழனிக்குமார் எனக்கு கிரையம் கொடுக்கும்போது வழக்கு சொத்தில் குடியிருந்தாரா என்றால் இல்லை. பழனிக்குமார், சுப்புராம் பெயரில் வீட்டு வரி இரசீது உள்ளதா என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி இரசீதுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வீட்டு வரி இரசீது என் பெயருக்கு மாற்றம் செய்வதற்கு ஊராட்சிமன்றத்தில் மனு கொடுத்தேனா என்றால் மனு கொடுத்தேன்.

6. மேற்படி மனு கொடுத்ததன் சம்பந்தமாக மேற்படி ஊராட்சிமன்ற தலைவரை எனது தரப்பு சாட்சியாக நான் விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் எனது வழக்கறிஞருக்குதான் தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் வழக்கு சொத்தை கிரையம் வாங்கும்போது அது மண் வீடாக இருந்ததாக சொல்லவில்லை என்றால் தெரியாது.

7. எனது நிரூபண வாக்குமூலத்தில் சுப்புராமன் மற்றும் பழனிக்குமார் தாவா சொத்தை பொதுவாகவும், தனித்தனியாகவும் அனுபவம் செய்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சுப்புராமன், பழனிக்குமார் தனித்தனியாக எத்தனை அடியளவுகள் அனுபவம் செய்து வந்ததாக குறிப்பிடமுடியுமா என்றால் பழனிக்குமார், சுப்புராமன் தலா தென்வடல் 58 அடி, கிழமேல் 15 அடி அளவுக்கொண்ட விஸ்தீரணத்தை அனுபவம் செய்து வந்தார்கள்.

8. மேற்படி அளவுகளுக்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். பழனிக்குமார், சுப்புராமன் தனித்தனியாக வீடு கட்டி குடியிருந்தார்கள் என்பதற்கான அடி அளவுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ. 2 மற்றும் வா.சா.ஆ. 3 ஆவணங்கள் சர்வே எண்.408/3 என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 மற்றும் வா.சா.ஆ. 3 சர்வே எண்ணுக்கும் வழக்கு சொத்து சர்வே எண்ணுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் உள்ள அடங்கலில் சர்வே எண்.248/26 என்றும் 58 ஏர்ஸ் என்றும் வகைப்பாடு மனை என்று காணப்பட்டுள்ளது என்றால் மேற்படி அடங்கல் தவறானதாகும்.

10. வா.சா.ஆ. 2 மற்றும் வா.சா.ஆ. 3 என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணமானது பழனிக்குமார் இறந்த பிறகுதான் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 3 ஆவணத்தில் பழனிக்குமாரின் வாரிசு சான்றிதழ், இறப்பு

சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பழனிக்குமாரின் வாரிசு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

11. உண்மையை மறைப்பதற்கு எல்லா ஆவணங்களையும் வழக்கறிஞரிடம் கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இனிமேலாவது மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எனது வக்கீல் சொல்லுவார். வழக்கு சொத்து நான்குமாலுக்கும், வா.சா.ஆ. 3, வா.சா.ஆ 2 ல் உள்ள சொத்தின் நான்குமாலுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல.

12. வா.சா.ஆ. 2 மற்றும் வா.சா.ஆ. 3 மூலம் எனக்கு எந்த உரிமையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கானது எனது சொத்திற்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது பாதைக்காக தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது நடைபாதையை ஆக்கிரமிப்பு செய்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யவில்லை பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13. வடக்கே ஆறுமுகம் வீடு, தெற்கே எனது வீடு, கிழக்கே வடராஜன் கவுண்டர் வீடு, மேற்கே செல்வம் மற்றும் நடைபாதை என்றால் சரிதான். நடைப்பாதை எனக்கு பாத்தியப்பட்டதாக உள்ளது. அ.வ.எண்.499/2009 ல் உள்ள வழக்கு சொத்து நான்குமாலுக்கும், வா.சா.ஆ. 3, வா.சா.ஆ 2 ல் உள்ள சொத்தின் நான்குமாலுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. 10 அடி நடைபாதை எனக்கு பாத்தியப்பட்டது என்று அ.வ.எண்.499/2009 ல் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர்

அறிக்கையை பொறுத்து நான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் ஆட்சேபணை செய்துள்ளேன்.

14. மேற்படி ஆட்சேபணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இருதரப்பு முன் நிலையிலும், இருதரப்பு ஆவணங்கள் அடிப்படையிலும் வருவாய்துறை ஆவணங்கள் அடிப்படையிலும் அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்த அடங்கல் பதிவேட்டில் சர்வே எண்.248/32 தெருவும், வீதியும் என்று காணப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

15. சர்வே எண்.248/32 ன் பழைய சர்வே எண்.227/3பா என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது சொத்திற்கு பழைய சர்வே எண்.227/3பா என்றால் சரிதான். மேற்படி அடங்களில் சர்வே எண்.408/3 இல்லை என்றால் மேற்படி அடங்கல் தவறானதாகும். மேற்படி அடங்கல் தவறாக உள்ளது என்பது குறித்து வருவாய்துறையிடம் சீர்திருத்தம் செய்ய மனு கொடுக்கவில்லை என்றால் 2015 ல் மனு கொடுத்துள்ளேன். மேற்படி மனுவை நேரடியாக கொடுத்தேனா என்றால் நேரடியாகத்தான் திருமங்கலம் வட்டாட்சியரிடம் கொடுத்தேன்.

16. மேற்படி மனு நகல் என் வசம் உள்ளதா என்றால் என் வசம் உள்ளது. மேற்படி மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எனது வக்கீல் சொல்வார். எனது நிரூபண வாக்குமூலத்தில் அ.வ.எண்.499/2009 வழக்கில் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.383/2009 இராவுத்தன் ஆகிய 1ம் பிரதிவாதி பெயரில் மட்டும்தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 01.55 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.02 12:32:37 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.